# உங்களுக்கும் எனக்கும் அறிமுகம் தேவையில்லை! என்னுடைய விலாசமே நீங்கள்தான்!

## தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுக் கூட்டத்தில் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நெகிழ்ச்சி!




**சென்னை, பிப். 29–**

**சென்னை, அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) காலை, தி.மு.க. ஆதி திராவிடர் நலக்குழுவின் அனைத்து மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள் அறிமுகம் மற்றும் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.**

**இதில் முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் 71–வது பிறந்த நாளை முன்னிட்டு, நலிவுற்ற கழக முன்னோடிகளுக்கு, இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொற்கிழி வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். அப்போது அவர் “உங்களுக்கும் எனக்கும் அறிமுகம் தேவையில்லை! என்னுடைய விலாசமே நீங்கள்தான்!” என நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.**

இக்கூட்டத்தில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

“கழக ஆதிதிராவிடர் நலக்குழுவின் பொறுப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் மற்றும் கழகத் தோழர்களுக்கு, பொற்கிழி வழங்குகின்ற இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்னும் பெருமை என்னவென்றால், இன்றைக்கு கலைஞரின் அரங்கத்தில் கலைஞர் நூற்றாண்டில் இப்படி ஒரு சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கக்கூடிய அண்ணன் கிருஷ்ணசாமி அவர்களுக்கு மீண்டும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கழகத்தின் சார்பாக, கலைஞர் அறக்கட்டளையின் சார்பாக, மருத்துவ உதவிக்காக, கல்வி உதவிக்காக, மாதந்தோறும் பொற்கிழி வழங்கிக் கொண்டிருக்கிறோம். உதவித்தொகை வழங்கிக் கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல, இளைஞர் அணி அறக்கட்டளையின் சார்பாகவும், தமிழ்நாட்டுக்கு நான் எந்தப் பகுதிக்கு சென்றாலும், அங்கு இளைஞர் அணியின் சார்பாகவும் பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

**மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி**

கடந்த ஒன்றரை வருடமாக. தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும் எத்தனை நிகழ்ச்சியில் கலந்து கொண்டாலும் தவறாமல் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வேன். அது என்னவென்றால், கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சி.

**45 மாவட்டங்கள், 46 கோடி ரூபாய்**

கிட்டதட்ட 45 மாவட்டங்களில் இதுவரைக்கும் கலந்துகொண்டு 46 கோடி ரூபாயை கழகத்திற்காக உழைத்த கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு எனது கைகளால் பொறிக்கிழியாக வழங்கி இருக்கின்றேன். இன்றைக்கு அதேபோல ஆதிதிராவிடர் நலக் குழுவின் சார்பாக, பொற்கிழி வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். அந்தக் குழுவிற்கு என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கழகத்தில் எத்தனையோ அணிகள், எத்தனையோ அணிகளுக்கான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டாலும், இன்றைக்கு இந்த ஆதிதிராவிடர் நலக்குழுவினைச் சேர்ந்த உங்களை எல்லாம் பார்க்கும்பொழுது எனக்கு மிகுந்த பெருமை, மிகுந்த ஆனந்தம்.

**சமத்துவத்திற்காக உருவாக்கப்பட்ட கழகம்!**

இன்னும் சொல்லப்போனால், இளைஞர் அணியின் நிகழ்ச்சிகள் கலந்து கொள்ளும்போது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி இருக்குமோ பெருமை இருக்குமோ அதேபோல இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களை எல்லாம் சந்திக்கும் பொழுது அதே பெருமை ஏற்படுகின்றது.

நம் திராவிட முன்னேற்ற கழகம் அடிப்படையிலேயே சமத்துவத்திற்காக உருவாக்கப்பட்ட கழகம். சமுதாயத்தில் இருக்கக்கூடிய அனைத்துவிதமான மேடு பள்ளங்களையெல்லாம் சமன்படுத்துவதற்காக உண்டான கழகம்தான் நம் திராவிட முன்னேற்றக் கழகம். வழக்கமாக தி.மு.க. வில் பல அணிகள் இருக்கும். ஆனால், இந்த அணிக்கு மட்டும் தான் பெயர், `குழு'. அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

இளைஞர் அணியில் இளைஞர்கள் மட்டும்தான் இருக்க முடியும். மகளிர் அணியில் மகளிர் மட்டும்தான் இருக்க முடியும். வழக்கறிஞர்கள் அணியில் வழக்கறிஞர்கள் மட்டும்தான் இருக்க முடியும். நாம் அனைவரும் ஒன்றாக இருப்பதற்குப் பெயர்தான் குழு. அதற்காகதான் இதற்கு அணி என்று பெயர் வைக்காமல் நம் கலைஞர் அவர்கள் குழு என்று பெயர் வைத்தார்.

**என்னுடைய விலாசமே நீங்கள்தான்!**

இன்னொரு விஷயத்தை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். கலந்தாலோசனைக் கூட்டம், அறிமுகக் கூட்டம் என்று போட்டிருக்கிறார்கள். அதற்கு எனக்கு விளக்கம் புரியவில்லை. யாரை யாரிடம் அறிமுகப்படுத்துகிறீர்கள். என்னை உங்களிடம் அறிமுகப்படுத்துகிறீர்களா? இல்லை, உங்களை என்னிடம் அறிமுகப்படுத்துகிறீர்களா? என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், நம் இரண்டு பேருக்கும் அறிமுகம் தேவை இல்லை. இன்னும் சொல்லப்போனால், என்னுடைய விலாசமே நீங்கள்தான். அதனால், அறிமுகம் கூட்டம் என்று ஏன் போட்டு இருக்கிறார்கள் என்று எனக்கு ஒரு சின்னத் தயக்கம் இருந்தது. ஒரு சந்தேகம் இருந்தது.

ஒடுக்கப்பட்டோரை அனுமதிக்காத பேருந்துகளின் உரிமத்தை ரத்து செய்தது நீதிக் கட்சி. ஒடுக்கப்பட்ட பிள்ளைகள் படிக்க பல பள்ளிகளை ஆரம்பித்தது நீதிக் கட்சி. மக்களின் உரிமைக்காக, உழைத்த நீதிக் கட்சி தலைவர்களுக்குப் பிறகு அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வாழ்நாளில் கடைசி வரை ஜாதி கொடுமைகளுக்கு எதிராகத்தான் நம் தலைவர் அவர்கள் போராடினார்கள். அவர்களின் வழியில் வந்த நம் முதலமைச்சர் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் நம் கழகத்தை இப்பொழுதும் அப்படித்தான் வழி நடத்திக் கொண்டிருக்கிறார்.

**அண்ணல் அம்பேத்கர் பேசியது!**

இந்த ஜாதி கொடுமைகளுக்கு எல்லாம் காரணம் என்ன? எந்தக் கூட்டம் இந்த ஜாதி அமைப்பால் பயனடைந்து கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் மற்றவர்களை விடத் தெளிவாகத் தெரிந்து வைத்திருப்பவர்கள்தான் நம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், நம் கழகத்தின் உடன்பிறப்புகள்.

அதனால்தான் நம் கழகத்தைப் பார்த்தால், நம் இன எதிரிகளுக்கு எப்பொழுதுமே வியர்த்துக் கொண்டிருக்கிறது. எப்படியாவது, நம் கழகத்தின் மீது கறை பூசலாமா? சேற்றை வாறி இறைக்கலாமா என்று முயற்சி செய்து பார்த்துக் கொண்டே இருக்கிறது. அந்த முயற்சி என்றைக்குமே தமிழ்நாட்டில் வேலைக்கு ஆகாது.

நான் சமீபத்தில் ஒரு மாநாட்டில் கலந்துகொண்டு பேசினேன். என்ன பேசினேன் பிறப்பால் அனைவரும் சமம் `பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' நமக்குள் எந்த வித உயர்வும் தாழ்வும் கிடையாது. அனைவரும் சமம் என்று தான் பேசினேன். ஆனால் நான் பேசியதை ஒன்றிய பிரதமரில் ஆரம்பித்து, அனைவரும் பொய்யாக செய்தி பரப்பி நான் பேசாததை எல்லாம் பேசினேன் என்று சொல்லி திட்டமிட்டு பொய் பேசினார்கள்.

இன்னும் சொல்லப்போனால், வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. நல்ல தீர்ப்பு வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. நீதிமன்றத்தின் மேல் நம்பிக்கை இருக்கிறது. ஆனால், மன்னிப்பு கேட்க வேண்டும் என்றார்கள். நான் சொன்னேன் மன்னிப்பு எல்லாம் கேட்க மாட்டேன் நான் தவறாக எதுவும் பேசவில்லை. கலைஞர் பேசினதைத் தான் பேசினேன், அண்ணல் அம்பேத்கர் பேசினதைத்தான் பேசினேன். அனைவரும் பிறப்பால் சமம் என்றுதான் பேசினேன் என்று இன்றைக்கு வரைக்கும் தெளிவாக இருக்கின்றேன்.

நம் திராவிட மாடல் அரசு அமைந்து 33 மாதங்கள் ஆகின்றன. இந்தக் குறுகிய காலத்தில் சமுதாயத்தில் சமத்துவம் நிலவ வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அறிவிப்பை அறிவித்து வருகின்றார். அதில் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாளை `சமத்துவ நாள்' எனவும், தந்தை பெரியாரின் பிறந்தநாளை `சமூக நீதி நாள்' எனவும் நமது முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். நம் திராவிட மாடல் அரசில் அயோத்திதாசருக்கு மணிமண்டபம் கட்டியவர்தான் நம் முதலமைச்சர் அவர்கள். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய இந்து சமய அறநிலையத்துறைக் கோயில்களில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம் போட்டது அதை வெற்றிகரமாக நடத்திக் காட்டியது நம் முதலமைச்சர் அவர்கள் தான்.

எல்லாத் துறைகளிலும் இட ஒதுக்கீடு முறையாகப் பின்பற்றப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்க, சமூகநீதி கண்காணிப்புக் குழுவும் அமைக்கப்பட்டது நம் திராவிட மாடல் அரசில்தான். இப்படி ஆயிரக்கணக்கான நூற்றுக்கணக் கான எடுத்துக்காட்டுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். தமிழ்நாடு முழுவதும் சமத்துவ புரங்களை உருவாக்கியவர், நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

நீண்ட நெடிய சென்னை உயர்நீதிமன்றத்தின் வரலாற்றில் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஜஸ்டிஸ் வரதராஜன் நீதிபதியாக வந்தார் என்றால், அதற்குக் காரணமாக இருந்தவர் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அந்த ஜஸ்டிஸ் வரதராஜன்தான் பின்னாளில் ஒடுக்கப்பட்ட பிரிவிலிருந்து முதல் உச்சநீதிமன்ற நீதிபதியாகவும் ஆனார்.

டி.என்.பி.எஸ்.சி. தேர்வில் வெற்றி பெற்று ஏழை, எளிய, பட்டியல், பழங்குடியினர் வீட்டுப் பிள்ளைகள் நீதிபதிகளாக இன்றைக்கு வந்திருக்கிறார்கள். தொழில்துறையிலும் பட்டியல் இன, பழங்குடியின மக்கள் சாதிக்க வேண்டும் என்பதற்காகதான் நம் முதலமைச்சர் அவர்கள் அண்ணல் அம்பேத்கர் தொழில்முன்னோடிகள் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

சமீபத்தில் கூட ஆதிதிராவிடர், பட்டியல், பழங்குடியினருக்கான தொழில் மாநாட்டை நம் கழக அரசு நடத்திக் காட்டியது. அந்த மாநாட்டையும் நான்தான் தொடங்கி வைத்தேன்.

**ஆதிதிராவிடர் நலக்குழுவின் கைகளில் இருக்கின்றது!**

ஆதிதிராவிடர் மக்கள் நலனில் இவ்வளவு தூரம் செயல்படுகின்ற நம் கழகத்தின் மீது சில அவதூறுகளை முன் வைக்கிறார்கள். அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை எல்லாம் தொடக்கத்திலேயே உடைத்தெறிய வேண்டியது நம் ஆதிதிராவிடர் நலக்குழுவின் கைகளில் இருக்கின்றது.

எனவே, இந்த அணியைச் சேர்ந்த ஒவ்வொருவரும் சமூக வலைதளங்களில் இன்னும் வேகமாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். கழகத்திற்கு எதிராகப் பரப்பப்படும் அவதூறுகளுக்கு உடனுக்குடன் பதிலடிக் கொடுக்க வேண்டும். இரண்டொரு உதாரணத்தை இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன். பல்லாயிரம் கோடி ரூபாய் செலவு செய்து, டெல்லியில் பாராளுமன்றத்தைத் திறந்தார்கள்.

பாராளுமன்றத்திற்கு யாரை அழைக்க வேண்டும். இந்தியாவின் முதல் குடிமகன் யார்? ஜனாதிபதியானால் அவர்களை அழைத்தார்களா ஏன் அழைக்கவில்லை. பழங்குடியின மக்கள், கணவனை இழந்தவர். ஆனால் யாரையெல்லாம் அழைத்துக்கொண்டு போனார்கள். ஊரில் இருக்கக் கூடிய அனைத்து சாமியார்களையும் அழைத்துக் கொண்டு போனார்கள்.

சமீபத்தில், அயோத்தியில் ராமர் கோயில் கட்டினார்கள். அதற்கு யாரெல்லாம் போயிருந்திருக்க வேண்டும். சாமியார்கள் எல்லாம் அதற்குப் போய் இருக்க வேண்டும். அதற்குப் போனார்களா? அதற்குப் போகவில்லை. போனது யார்? ஒன்றிய பிரதமர் மோடி போனார் என்று, சாமியார்கள் எல்லாம் வர மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள்.

இதுதான் இப்போது இருக்கக்கூடிய இந்த நாட்டின் நிலைமை. அதேபோல் மதத்தை அரசியலாகவும், அரசியலை மதமாகவும் பார்க்கின்ற பாசிஸ்ட்டுகள் வெளி வேஷம் போடுகிறார்களே தவிர, உண்மையிலேயே அவர்களுக்கு ஒடுக்கப்பட்டோரின் முன்னேற்றத்தில் எந்த ஈடுபடும் கிடையாது.

ஒன்றிய பா.ஜ.க. அரசு என்ன முயற்சிக்கிறது. ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே மொழி, ஒரே உடை இப்படி அனைத்தையும் ஒன்றாக்கப் பார்க்கிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசு. கடந்த பத்து வருடத்தில் அடிமைகள் மாநிலத்தின் அனைத்து உரிமைகளையும் ஒன்றிய பா.ஜ.க.-விடம் அடகு வைத்து விட்டார்கள். இப்போது நம்மையும் மிரட்ட பார்க்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. அடிமைகள் கூட்டம் மாதிரி நாமும் பயப்படுவோம் என்று நினைக்கிறார்கள். ஆனால், பயப்படுவோமா? ஈ.டி, சி.பி.ஐ., ஐ.டி ரெய்டு என்று நம்மை மிரட்ட பார்க்கிறார்கள். ஒன்றிய பிரதமர் மோடி அவர்களே, எங்களை விடுங்கள் எங்கள் வீட்டில் இருக்கக்கூடிய கைக்குழந்தைகூட உங்களைப் பார்த்து பயப்படாது.

நாங்கள் எல்லாம் தந்தை பெரியாரின் வளர்ப்பு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் வளர்ப்பு, பேரறிஞர் அண்ணாவின் வளர்ப்பு. எங்களுக்கு சுயமரியாதை மிக, மிக முக்கியம்.

வரப்போகின்ற தேர்தல் மிக மிக முக்கியமான தேர்தல். நம் மாநில உரிமைகளை எல்லாம் மீட்க வேண்டும் என்றால், உங்களுடைய உழைப்பு மிக முக்கியம். இங்கு பேசும்பொழுது எல்லோரும் சொன்னார்கள். ஈரோடு தேர்தலில் எவ்வளவு மிகுந்த ஒரு சிறப்பான பிரச்சாரத்தை மேற்கொண்டோம். தலைவரே பாராட்டினார்கள் என்று சொன்னார்கள்.

**அதைவிட 100 மடங்கு உழைக்க வேண்டும்!**

சென்ற நாடாளுமன்றத் தேர்தல் எந்தச் சூழலில் நடந்தது. அப்போது நாம் எதிர்க்கட்சி அப்பொழுதும் ஒரு மிகப்பெரிய வெற்றியை பெற்றோம். தமிழ்நாடு பாண்டிச்சேரி சேர்த்து 40 தொகுதிகளில் தமிழ்நாட்டு மக்கள் நமக்கு 39 தொகுதிகளில் மிகப்பெரிய வெற்றியைக் கொடுத்தார்கள். இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய இயக்கம் என்ற பெருமையைச் சென்ற நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் நமக்குத் தந்தார்கள்.

அப்போது நாம் எதிர்க்கட்சி. அதன் பிறகு தொடர்ந்து உள்ளாட்சித் தேர்தல், அதன் பிறகு சட்டமன்ற தேர்தல் 2021- சட்டமன்ற தேர்தலில் எதிர்க்கட்சியாக இருந்து மக்களின் வாக்கைப் பெற்று நம் கழகத் தலைவர் அவர்கள் முதலமைச்சராக அமர்ந்தார்கள்.

இப்போது நாடாளுமன்றத் தேர்தலை எதிர் கொள்ள இருக்கின்றோம். இப்போது நாம் ஆளும் கட்சி. சென்ற முறை வாங்கிய நாடாளுமன்றத் தேர்தல் வாக்குகளை விட ஒரு சதவிகிதம் வாக்கு குறைந்தால் கூட, எதிர் அணியினர் என்ன சொல்வார்கள்? `பார்த்தீர்களா திமுகவிற்கு மக்கள் செல்வாக்குக் குறைந்துவிட்டது' என்று சொல்வார்களா மாட்டார்களா? அதற்கு நாம் வழிவகைச் செய்யப் போகிறோமா? அதற்கு நாம் இடம் கொடுப்போமா? இடம் கொடுக்கக் கூடாது. அதற்கு உங்களுடைய உழைப்பு மிக முக்கியம்.

தேர்தல் பங்கீடு, வேட்பாளர் பட்டியல் இதையெல்லாம் கழகத் தலைவர் நம் முதலமைச்சர் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். கண்டிப்பாக நிச்சயமாக அனைத்து தொகுதிகளிலும் சிறந்த வேட்பாளரை மக்கள் அன்பு பெற்ற வேட்பாளரை வெற்றி வேட்பாளரை உங்களின் ஆதரவைப் பெற்ற வேட்பாளரை தலைவர் அவர்கள் அறிவிப்பார்கள்.

நான் உங்களிடம் கேட்டுக் கொள்வதெல்லாம் தலைவர் 40 தொகுதிகளிலும் யாரை வேட்பாளராக அறிவித்தாலும் 40 தொகுதிகளிலும் வேட்பாளராக நிற்க போவது நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் வேட்பாளர் கலைஞருக்காகத்தான் நாம் தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொள்ளப் போகின்றோம். கலைஞரைத்தான் டெல்லிக்கு அனுப்பப் போகிறோம் என்ற அந்த உணர்வோடு தேர்தல் பிரச்சாரத்தில் நீங்கள் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**40 க்கு 40**

மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். கட்சி நிர்வாகிகள் நமக்குள்ளேதான் சின்னச் சின்னப் பிரச்சனைகள் இருக்கின்றன. அதை மறந்துவிட்டு அடுத்த 60 நாட்கள் இன்னொரு ஏழு, எட்டு நாட்களில் தேர்தல் தேதி அறிவித்து விடுவார்கள். நமக்குள்ளே இருக்கக்கூடிய சின்னச் சின்ன மனக்கசப்புகளை எல்லாம் விட்டு விட்டு இந்த இரண்டரை வருடத்தில் தலைவர் அவர்கள் நிறைவேற்றிய திட்டங்கள் பற்றி எடுத்துரைத்துப் பேசுங்கள்.

நம் மாநில உரிமைகளை மீட்க வேண்டுமென்றால், நீங்கள் யாரை நினைக்கிறீர்களோ, நம் தலைவர் யாரை நினைக்கிறாரோ அவர்தான் அடுத்த ஒன்றிய பிரதமராக டெல்லியில் அமர வேண்டும் என்றால், 40 க்கு 40 தொகுதி நாம் வெற்றிப் பெற்றாக வேண்டும்.

மக்களவைத் தேர்தல், விரைவில் வர இருக்கின்றது. அதன் முக்கியத்துவத்தை நீங்களெல்லாம் உணர்ந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

உங்கள் குழுவின் துணைச் செயலாளர் வனத்துறை அமைச்சர் மதிவேந்தன் அவர்கள் பேசும்போது ஒரு முக்கியமான விஷயத்தைச் சொன்னார். இந்தக் குழு இளைஞர் அணிக்கு நிகரான பணிகளை நாங்கள் நிறைவேற்றுவோம் என்று சொல்லியிருக்கின்றார்.

அவர் ஏன் சொன்னார் என்று எனக்குப் புரிந்து விட்டது. ஏனென்றால், அவர் இளைஞர் அணியில் இருந்து பதவி உயர்வு பெற்று இன்றைக்கு இந்தக் குழுவிற்கு வந்து இன்றைக்கு அமைச்சராக இருக்கிறார். அந்த உரிமையோடுதான் அவர் இங்கே குறிப்பிட்டிருக்கிறார். அவருக்கு இந்த நேரத்தில் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2021 தேர்தலில் அ.தி.மு.க அடிமைகளை விரட்டி அனுப்பினோம். இப்போது 2024 தேர்தலில் அடிமைகளின் ஓனர்ஸ் எஜமானர்களையும் அனுப்ப வேண்டிய தருணம் வந்துவிட்டது. எனவே, அதற்கெல்லாம் இந்தக் குழுவின் சார்பாக தேர்தல் பணியாற்ற நீங்களெல்லாம் தயாராக இருப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு இந்த வாய்ப்பை அளித்த கிருஷ்ணசாமி அவர்களுக்கும், இந்தக் குழுவைச் சேர்ந்த அத்தனைப்பேருக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்தக் கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் பி.கே.சேகர் பாபு, காந்தி, மதிவேந்தன், மாவட்டக் கழகச் செயலாளர் சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, கிருஷ்ணசாமி, ஆதிதிராவிடர் நலக்குழுவின் இணைச் செயலாளர்கள் மருதூர் ராமலிங்கம், வி.பி.ராசன், புஷ்பராஜ், திப்பம்பட்டி ஆறுசாமி, குழுவின் துணைச் செயலாளர்கள் தசரதன், துரைசாமி, மாரியப்பன் கென்னடி, பரமானந்தம், பொன்தோஸ், தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா, குழுவின் சென்னை மாவட்ட அமைப்பாளர்கள் இளம்பரிதி, மோசஸ், சுரேஷ், எல்.பி.எஃப் மோகன், ஈரோடு இறைவன், திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெயக்குமார், சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பிரகாஷ் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

